بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 05.09.14 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 05 September 2014 (Tamil)**

## யூ.கே ஆண்டு மாநாட்டில் இறங்கிய அல்லாஹ்வின் அருள்கள் பற்றிய ஈமானை வலுவூட்டும் குறிப்புகள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

சென்ற வாரம் யூ. கே ஆண்டு மாநாடு நடைபெற்றது.அல்லாஹ்வின் அருளினால் நலமுடன் தனது அருள்களினால் நமக்கு பயன்பெறச் செய்தவாறு கலந்து கொண்டவர்களும், உலகில் அமர்ந்த மக்களும் பார்த்தனர்; அவற்றிலிருந்து பயன் பெற்றனர் - அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹ்வின் அருளினால் இந்தமுறை ஏற்பாடு மிகவும் சிறப்பாக இருந்தது என்பதையே சந்திக்கும் அனைவரும் கூறினர்; எழுதுகின்ற எண்ணற்றவர்களும் எழுதினர். சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளும் அல்லாஹ்வின் அருளினால் மிகவும் உயர்ந்த அளவில் ஆயத்தம் செய்யப்பட்டவையாக இருந்தன; அவை அறிவுப்பூர்வமானவையாகவும், ஆன்மீகமானவையாகவும் இருந்தன எனவும் கூறப்பட்டது.

மாநாட்டிற்கு அடுத்த குத்பாவில் மாநாட்டின்போது இறங்கிய அல்லாஹ்வின் அருள்களையும் அருட்கொடைகளையும் அவனது ஆதரவுகளையும் பற்றி பொதுவாக எடுத்துக் கூறுவது வழக்கம். வந்திருந்த விருந்தினர்களின் தாக்கங்களையும் எடுத்துக் கூறுகிறேன். அவ்வாறே பணியாளர்களுக்கும் நன்றி கூறுகிறேன். ஏற்பாடுகளில் இருந்த குறைபாடுகளைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறேன். இன்று அதனை அடிப்படையாகக் கொண்டே சில விஷயங்களைக் கூறுவேன்.

மாநாட்டின் சூழ்நிலை அல்லாஹ்வின் அருளினால் எப்படிப்பட்ட தாக இருக்கிறதென்றால், அது ஒவ்வொரு நல்ல இயல்பு கொண்டவர்களுக்கும் நல்ல தாக்கத்தை உருவாக்குகிறது. அஹ்மதி அல்லாத, முஸ்லிம்கள் அல்லாத மக்களிடம் மாநாட்டின் அருள்களைப் பற்றி அஹ்மதிகள் எடுத்துக் கூறும்போது அது எந்த அளவுக்கு உண்மையாக இருக்கிறது என சென்று பார்ப்போம் என்ற எண்ணத்தில் இங்கு வருகின்றனர். பிறகு அஹ்மதியல்லாத சகோதரர்கள் மாநாட்டில் கந்து கொண்ட பிறகு, எங்களுக்கு மாநாட்டைப் பற்றி எந்த அளவுக்கு எடுத்துச் சொல்லப்பட்டதோ அதை விட பல மடங்கு சிறப்பானதாக நாங்கள் இங்கு கண்டோம் எனக் கூறுகின்றனர். மேலும் **சிலருக்கு எந்த அளவுக்கு இதன் தாக்கம் ஏற்படுகிறது என்றால், அவர்கள் பைஅத் செய்து விடுகிறார்கள்.** பைஅத் செய்து விடுகின்றவர்களின் தாக்கங்களைப் பற்றியும் எடுத்துக் கூறுவேன். ஆயினும் எவர்கள் உலகளாவிய பைஅத்தின்போது கலந்து கொள்ளாதவர்களாக இருந்தாலும் நேற்று (3.09.14) பைஅத் செய்தார்களோ அவர்களின் தாக்கங்களை முதலில் எடுத்துக் கூறுகிறேன்.

அவர்களில் ஒருவர் கொயிட்டாமாலா (**Guate mala**) வைச் சேர்ந்த சமீஃ காதிர் சாஹிப். இவர் வியாபாரம் தொடர்பாக இங்கு இருக்கிறார். அவர் கூறுகிறார்: ஒருவருக்கொருவர் அன்புடனும் சகோதரத்துவத்துடனும் இருக்க வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மிடம் உருவாக்க விரும்பிய அந்த செயல் அளவிலான முன்மாதிரியை நான் இங்கு கண்டேன். ஆண்டு மாநாட்டின் மிகச் சிறந்த ஏற்பாடுகள், கட்டுப்பாடுகள், சகோதரர்களின் ஒருவர் மற்றவருடனான அநுதாபம் சகோதரத்துவத்தின் உணர்வு ஆகியவை என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது.நம்பிக்கையாளர்களின் ஒருவர் மற்றவருக்கிடையிலான அன்பு, சகோதரத்துவத்திற்கான உதாரணம் அது ஓர் உடலைப் போன்றது; அதன் ஓர் உறுப்புக்கு துன்பம் ஏற்பட்டால் அதனால் முழு உடலும் அதனை உணர்கிறது என்ற அருளுக்குரிய ஹதீஸின் செயல் அளவிலான காட்சியை நான் கண்டேன். அல்லாஹ் மாநாட்டின் பணியாளர்களுக்கு சிறப்பான

நற்கூலியை வழங்குவானாக என அவர் கூறுகின்றார்.

அவ்வாறே கோஸ்டாரிகா **(Costa Rica)** விலிருந்து வந்திருந்த குழுவில் ஹைதர் சபீலியா என்பவர் கலந்து கொண்டிருந்தார். அவர் கூறுகிறார்: ஜமாஅத்தின் உயரிய ஏற்பாடு என்னை மிகவும் நல்ல தாக்கத்திற்குள்ளாக்கியது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை கலப்பற்ற முறையில் நிறைவேற்றியது என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது. நான் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த மக்களை சந்தித்துப் பேசி அவர்களுடன் கருத்து பரிமாறிக் கொண்டவாறு மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். மாநாட்டில் கலந்து கொண்டதனால் இஸ்லாத்தின் பக்கம் எனது கவனம் மேலும் அதிகமாக திரும்பியது. மேலும் இதன் மூலமாக மனத்தூய்மையும், ஈமானும் முன்னேற்றமடைந்தது. **காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகள், அறிவுரைகள், வழிகாட்டல்கள் ஷியா முஸ்லிம், சுன்னி முஸ்லிம் என்ற எவ்வித பாகுபாடுமின்றி அனைத்து முஸ்லிம்களுக்குமாகும்.**

கோஸ்டாரிகாவிலிருந்தே டயானா நயீமா சாஹிபா கூறுகிறார்: மாநாட்டில் கலந்து கொண்டது ஓர் அற்புதமான அநுபவமாகும். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த பல்வேறுபட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஒருவருக்கொருவரிடம் இருந்த அன்பும் நேசமும் எனது உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த சூழ்நிலை எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தை நினைவூட்டி விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் முன்னேற்றம் அடையும்; அதன் மூலமாக இஸ்லாத்தின் அன்பிற்குரிய தூதுச் செய்தியும் பரவிக் கொண்டிருக்கும்......

எனவே இஸ்லாத்தின் அழகிய தூதுச் செய்தியைக் கொடுக்கின்ற அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றவர்கள் மீது அசுத்தத்தை வாரியிறைக்காமல் - எவர் மீதும் விமரிசனம் செய்யாமல் ஒற்றுமையில் ஒன்று சேர்க்க முயற்சி செய்கின்றது. பிறகு அந்த அன்பு, நேசத்தின் காட்சியை வருகின்ற ஒவ்வொருவரும் காண்கின்றார். தமக்குள் நடந்து கொள்ளும் முறை, மற்றவருடன் நடந்து கொள்ளும் முறை ஆகியவற்றைப் பார்த்து - உண்மை இஸ்லாத்தின் முன்மாதிரியைப் பார்த்து அதன் அங்கமாக மாற வேண்டும் என்பதை கட்டாயமாக்குகிறது. அல்லது குறைந்த பட்சம் இஸ்லாத்தின் மீது செய்யப்படும் ஆட்சேபணைகள் இங்கு வந்த மக்களைப் பார்த்து நீங்கி விட்டது என்று சொல்லும் நிலை கட்டாயம் ஏற்படுகிறது. இந்தக் காட்சியை அல்லாஹ் எல்லா காலத்திலும் நமக்குக் காட்டி வந்திருக்கின்றான்; இப்போதும் காட்டிக் கொண்டிருக்கிறான். இது, இஸ்லாமிய போதனை ஒருபோதும் பழமையானதில்லை; அல்லாஹ் தனது ஆதரவின் கரங்களை ஒருபோதும் நீக்கியதில்லை.

நாம் பார்க்கின்ற இந்த விஷயங்கள் மனித முயற்சிகளினால் உருவாக முடியாது. நான் சென்ற குத்பாவிலும் கூறியது போன்று, **மாநாட்டின் சூழ்நிலை ஒரு மவுனமான தப்லீகை செய்து கொண்டிருக்கிறது. அதில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும், ஒவ்வொரு பணியாளரும் ஒரு மவுனமான முபல்லிக் ஆக இருக்கின்றார்.** அஹ்மதியல்லாத அனைத்து விருந்தினர்களும், மவுனமாக இந்த பணிகள் அனைத்தும் நடக்கின்றன; எங்கேயும் எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லை; எவ்வித கடுமையான சொற்களும் தென்படுவதில்லை. சிறியவர், பெரியவர், ஆண்கள், பெண்கள் அனைவரும் தொண்டு செய்ய வேண்டும் என்ற உணர்வில் ஈடுபட்டிருக்கின்றனர் ஆகியவற்றைப் பார்த்து ஜமாஅத்தைப் பற்றிய நல்ல தாக்கம் அவர்களிடம் ஏற்படுகிறது. மேலும் மாநாட்டில் முதன்முறையாக கலந்து கொள்பவர்களின் ஈமானுக்கும் எல்லையில்லா முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைகிறது - ஏன் - எப்பொழுதும் கலந்து கொள்பவர்களும் புதிதாக புத்துணர்வைப் பெறுகின்றனர். தனது ஈமானிலும் உறுதியிலும் முன்னேற்றம் கண்டவாறு இங்கிருந்து செல்கின்றனர்.

ஒருமுறை கான்கோ கன்ஷாசாவிலிருந்து மாநில அசம்ளி ஸ்பீக்கர் பந்தோனதோ பூனீபோஷீவா சாஹிப் முதன்முறையாக ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டின் மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் அவர் பார்த்தார். மாநாட்டுத் திடலில் அமர்ந்து கேட்டார். தொழுகை நேரங்களிலும் மாநாட்டுத் திடலில் அமர்ந்திருந்தார். அவர் உலகளாவிய பைஅத்தையும் பார்த்தார். அவர் கூறுகிறார்: இங்கு ஒவ்வொருவரும் பல ஆண்டுகளாக அறிமுகமானவர்களைப் போன்று சந்திக்கின்றனர். சலாம் கூறுகின்றனர். இதுதான் உண்மையான அன்பாகும். இதுதான் உண்மையான மார்க்கமாகும். மேலும் அவர் கூறுகிறார்: ஒருமுறை நாங்கள் மாநில அளவில் ஒரு நிகழ்ச்சி நடத்தவிருந்தோம். அதில் முதல் நாள் அன்றே ஏற்பாடு சரியில்லாததன் காரணமாக 26 பேர் மரணித்து விட்டனர். அதனால் நிகழ்ச்சியை கைவிட வேண்டியது ஏற்பட்டது. ஆனால் இந்த மாநாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் வந்தும் ஏற்பாட்டில் எவ்வித குறைபாடும் இல்லாததைக் கண்டு நான் மிகவும் வியற்பிற்குள்ளாகிறேன்.

எங்கேயும் எந்த விதமான குழப்பமும் ஏற்படவில்லை. எவராவது மரணிப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத விஷயம். ஆனால் இங்கு எவரும் உரத்த குரலில் பேசவில்லை. **சிறுவர்கள் தண்ணீரையோ அல்லது சாப்பிடும் பொருள்களையோ அன்புடன் கொடுக்கும்போது தேவை இல்லாமல் இருந்தபோதிலும் அந்த சிறுவர்களிடமிருந்து வாங்க மறுக்க முடியவில்லை!**

பிறகு பெனினைச் சார்ந்த ஃபிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் தனது சிந்தனைகளை வெளிப்படுத்தியவாறு கூறினார்: இந்த மாநாட்டின் ஏற்பாடுகளைப் பாராட்ட என்னிடம் வார்த்தைகள் இல்லை. மிகவும் அருமையான, ஏற்பாடுகளைக் கொண்ட மாநாடாக இருந்தது. நான் ஜமாஅத் மக்களிடம், தன்னார்வத்துடன் மற்றவர்களுக்கு தொண்டாற்றும் அசாதாரணமான உணர்வைக் கண்டேன். இந்த உணர்வு ஒவ்வோர் அஹ்மதியின் ஆன்மாவின் உணவாக மாறி இருக்கிறது. இதன் காரணமாகத்தான் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. அவர் கூறுகிறார்: நான் சிறுவர்களிடமும், பெரியவர்களிடமும் - ஏன் - முதியவர்களிடமும் ஒரு விஷயத்தைக் கண்டேன். அதாவது அவர்களுக்கு தனது உண்ணல், குடித்தல் பற்றி எந்தக் கவலையும் இருக்கவில்லை. கவலை இருந்ததென்றால் நமது மாநாடு நன்றாக நடைபெற வேண்டும் என்ற ஒன்று மட்டும்தான் இருந்தது. நான் உலகத்தைக் கண்டிருக்கிறேன். **அமெரிக்கா போன்ற சூப்பர் பவர் ஏற்பாடுகளையும் கண்டிருக்கிறேன். ஆனால் மாபெரும் ஆற்றல் வாய்ந்தவர்களிடமும் இந்த அளவுக்கு கட்டுக் கோப்பான, அமைதி நிறைந்த ஏற்பாட்டை நான் காணவில்லை.** இங்கு முற்றிலும் சிறு வயதைக் கொண்டவர்களும் தன்னார்வத் தொண்டு செய்கின்றனர். அவர்களுக்கு கிடைத்த வழிகாட்டல்களை மிகவும் ஆர்வத்துடன் பேணுகின்றனர்.

பிறகு கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய ஆற்றலுக்கான இரகசியம் என்னவென்றால், ஜமாஅத்திற்கு ஒரு கலீஃபா கிடைத்துள்ளார். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் உலகில் அமைதியை நிலைநாட்ட பாடுபடுகிறது என்றும், இன்று உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் தான் சகோதரத்துவத்தின் போதனையைத் தருகிறது; பொறுமையை போதிக்கிறது என நான் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றேன்.

உகாண்டாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் டாக்டர் கஸ்பஸ் சுயோங்கா என்பவர் மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: மாநாட்டின் நிலை பற்றிய காட்சி சொல்லில் வருணித்துக் கூற முடியாது. முறைப்படி இரண்டு நாட்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்தார். கண்காட்சியையும் கண்டார். எல்லாவற்றையும் பார்த்த பிறகு, **'இத்தகைய ஒழுங்கு முறையை இராணுவம்தான் செய்ய முடியும்' என்றார். அவர் என்னையும் சந்தித்தார். நான் அவரிடம் உங்களுடைய இராணுவமும் செய்ய முடியாது என்றேன். அப்போது அவர். சரிதான்; இத்தகைய ஒழுங்கு முறையை உலகின் எந்தவோர் இராணுவமும் செய்ய முடியாது என்பதில் எந்த ஐயமும் இல்லை என்று ஒப்புக் கொண்டார்.**

நைஜீரியாவிலிருந்து வந்திருந்த குழுவில் ஒரு தொலைக்காட்சி இயக்குநர் இஸ்ஹாக் சாஹிப் இருந்தார். அவர் கூறுகிறார்: மாநாட்டின் எல்லா ஏற்பாடுகளும் உலகத் தரம் வாய்ந்ததாக இருந்தன. விமான நிலையத்தில் வரவேற்பதிலிருந்து மாநாடு முடியும் வரை எல்லா வகையிலும் எல்லா ஏற்பாடுகளும் மிகச் சிறப்பானவையாக இருந்தன. மாநாட்டின் சொற்பொழிவுகள் சிறந்தவையாக இருந்தன. **நான் முதன்முறையாக உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியைப் பார்த்தேன். அது மிகவும் உணர்வுப்பூர்வமான காட்சியாக இருந்தது.** அந்தக் காட்சி என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. மாநாட்டு நிகழ்ச்சியில் கலீஃபத்துல் மஸீஹ் இருக்கும்போது அந்த காட்சி ஆன்மாவை ஈர்க்கக் கூடியதாகவும், உணர்ச்சிப் பூர்வமானதாகவும் இருந்தது. எதுவரை என்றால், என்னால் என் உணர்ச்சியை அடைக்க முடியவில்லை. **ஆயிரக்கணக்கான எண்ணிக்கையைக் கொண்ட மக்கள் எவ்வாறு தமது இமாமுக்கு முன்னால் தலை சாய்த்தவாறு அமர்ந்திருக்கின்றனர் என்பதைப் பார்த்து என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.** இப்படிப்பட்ட காட்சியை நான் என் வாழ்க்கையில் ஒருபோதும் கண்டதில்லை. ஜமாஅத் சகோதர்கள் இந்த மாநாட்டின்போதும் அதன் பிறகும் எத்தகைய அன்பையும், நேசத்தையும் வெளிப்படுத்தினார்களோ அந்த சிறந்த முன்மாதிரியைத்தான் முஹம்மதிய்ய உம்மத் முழுவதும் பேண வேண்டும் என நான் என் நாட்டிற்கு திரும்பிச் சென்று கூறுவேன் என்றார்.

நைஜீரியாவிலிருந்து நேஷனல் மிர்ரர் என்ற ஒரு பத்திரிகையின் துணை ஆசிரியர் சகீனா லவால் சாஹிபா வந்திருந்தார். அவர் கூறுகிறார்: ஜமாஅத் அஹ்மதிய்யாவின் ஒவ்வொரு நபரும் ஒருவர் மற்றவரை நேசிக்கிறார் என்பதையும் ஒவ்வொருவரும் புன்சிரிப்புடன் சந்திக்கின்றார்

என்பதைம் எல்லா நேரமும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறார் என்பதையும் யூ. கே. மாநாட்டிற்கு வந்ததனால் உணர முடிந்தது. **நான் பத்திரிகையாளராக பணியாற்றி 18 ஆண்டுகள் ஆகின்றன. எல்லா முஸ்லிம் அமைப்புகளிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் இஸ்லாத்தின் கட்டளைகளின்படி செயல்படுகிறது என்றும் அது மற்ற முஸ்லிம்களுக்கு ஒரு முன்மாதிரி என்றும் பகிரங்கமாக அறிவிப்பு செய்கிறேன்.** மேலும் இந்த விஷயத்தைக் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரு நகரத்தின் துணை மேயர் மற்றும் கவுன்ஸில் கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: இஸ்லாத்தைப் பற்றி மீடியாவில் நாங்கள் பார்த்ததற்கு நேர்மாறான விஷயத்தை நாங்கள் மாநாட்டில் வந்து கண்டோம். நீங்கள் எடுத்து வைப்பதுதான் உண்மையான இஸ்லாமாகும் என தெரிந்து கொண்டோம். இஸ்லாத்தின் போதனை மிகவும் அன்பானது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத் எங்கள் நாட்டிலும் அதிகமாக தொண்டுகள் செய்வதை நான் பார்க்கின்றேன்.

பிறகு **பெல்ஜியத்தின் துணை மேயரின் மனைவி கூறுகிறார்:** நான் பெண்களின் மாநாட்டிலும் சென்றேன். அங்கு எனக்குக் கிடைத்த அன்பும் நேசமும் உலகத்தில் எனக்கு எங்கும் கிடைக்கவில்லை. கலீஃபத்துல் மஸீஹ் மாநாட்டுத் திடலுக்கு வரும்போது அது ஓர் அற்புதமான சூழ்நிலையாக இருந்தது. அங்கு ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் பெண்கள் அமர்ந்திருந்தனர். ஆயினும் கலீஃபத்துல் மஸீஹ் சொற்பொழிவாற்றும்போது பெண்கள் முழுமையான அமைதியுடன் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். **இஸ்லாத்தின் போதனையில் பெண்களைப் பற்றி எனது உள்ளத்தில் இருந்த அனைத்து கேள்விகளுக்கும் கலீஃபாவின் சொற்பொழிவில் எனக்கு விடை கிடைத்து விட்டது.**

மால்டாவிலிருந்து ஒரு பத்திரிகையாளர் பாதூலூ சாஹிப் வந்திருந்தார். இவர் தொலைக்காட்சியின் ஒரு நிகழ்ச்சியை நடத்தவும் செய்கின்றார். அவர் தனது நாட்டிற்கு சென்று தனது தொலைக்காட்ட்சியில் ஜமாஅத்தைப் பற்றிய ஒரு மணி நேர டாக்குமென்டரியை ஒளிபரப்புவதாகவும் கூறினார். அவர் ஜமாஅத்துடன் 3 ஆண்டுகள் தொடர்பு கொண்டுள்ளார். அவர் என்னுடனும் நேர்காணல் நடத்தினார். அவர் கூறுகிறார்: ஜமாஅத் 125 ஆண்டுகளில் 206 நாடுகளில் பரவி இருக்கிறதென்றால் இது இறைவனின் உதவியின்றி சாத்தியமில்லை.

பல்வேறு பத்திரிகையாளர்களும் இங்கிருந்தும் வெளியிலிருந்தும் வந்திருந்தனர். **ஓர் இந்து (பெண்) பத்திரிகையாளர் கூறுகிறார்:** முஸ்லிம்களின் விழாக்களுக்கு செல்ல வேண்டாம் என எனது தாயார் என்னை தடுத்திருந்தார். அவர்கள் மிகவும் பயங்கரமானவர்கள். உன்னை அடித்து கொன்று விடுவார்கள்; பிறகு எங்கு சென்றாய் என்பதே தெரியாது எனவும் கூறினார். ஆயினும் நான் எனது தாயாரின் பேச்சைக் கேட்கவில்லை. இப்போது எனக்கு இங்கு கிடைத்த அநுபவத்தை வைத்து நான் எனது தாயாரிடம் சென்று, அஹ்மதிகள் நம்மை விட அதிகமாக அமைதியடைந்தவர்களாக இருக்கிறார்கள்; அவர்களின் போதனை எவ்வளவு அழகானவை என்றால் நீங்களும் சென்று பார்க்க வேண்டும் என நான் கூறுவேன். நான் இந்த மாநாட்டிலிருந்து இழப்பிற்குரியவளாக ஆகவில்லை என அவர் கூறுகிறார்.

இவ்வாண்டு பெலிஸ் **(Belize)** என்ற நாட்டில் அஹ்மதிய்யத் புதிதாக நிலைபெற்றுள்ளது. அங்குள்ள ஒரு பெண் பத்திரிகையாளர் மர்யம் அப்தல் என்பவர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட எனது அநுபவம் எனது எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இந்த சில நாட்களில் எனக்கு அன்பு மட்டுமே காணக் கிடைத்தது. ஜமாஅத் எனக்கு அதிகமானதை வழங்கி விட்டது. நான் இதனை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்வேன்.

மெக்ஸிகோவிலிருந்து வந்திருந்த ஒரு பெண்மணி கியானாலூ கூறுகிறார்: இந்த மாநாடு எனக்கு பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது. எனக்கு எனது வாழ்க்கையின் உண்மைத்துவம் தெரிந்தது மட்டுமல்லாது முஸ்லிம் உலகின் தற்போதைய நிலையின் காரணங்களும் தெரிய வந்தது. எனக்கு இதற்கு முன்னர் ஒரு சமுதாயத்தைப் பற்றி அவர்கள் மிகவும் ஒற்றுமையுள்ளவர்கள் எனவும் அவர்களுக்கு பல்வேறு நாடுகளில் சென்டர்கள் இருக்கின்றன எனவும் தெரிய வந்தது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு, அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் போன்று ஒன்றுபட்டவர்கள் அல்ல என்றும், அந்த பிரிவினர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் போன்று பரவ

வில்லை என்றும் இப்போது எனக்கு தெரிய வந்துள்ளது. நான் எந்த பிரிவை சார்ந்திருந்தேனோ அதுதான் சரியானது என நான் கருதியிருந்தேன். ஆனால் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவுகளின் மூலமாக இங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்பாடு இருக்கிறது எனத் தெரிந்தது. அல்லாஹ்வே! என்னை நல்லவர்களுடன் சேர்த்தருள்வாயாக. உண்மையான கிலாஃபத்தின் மூலமாக எனக்கு வழிகாட்டுவாயாக என நான் துஆ செய்து வந்தேன். இப்போது அல்லாஹ் எனது துஆவை ஏற்றுக் கொண்டான் எனக் கருதுகிறேன். இப்போது அல்லாஹ் எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பை வழங்கியிருக்கிறான்.

**மெக்ஸிகோவைச் சேர்ந்த இமாம் இப்ராஹீம் சாஹிப் தன்னை பின்பற்றும் 70 பேர்களுடன் அஹ்மதிய்யத்தில் இணைந்துள்ளார்.** அவர் கூறுகிறார்: மாநாட்டு நாட்களில் அல்லாஹ்வின் அருள்கள் பொழிகின்றன என்றும் கிலாஃபத்தின் நிழலில் பல்வேறுபட்ட இன, நிற மக்கள் ஒருவருக்கொருவர் அன்பு, சகோதரத்துவத்துடன் பழகுவதைக் கண்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. கலீஃபாவின் சொற்பொழிவுகளைக் கேட்டு எனக்கு ஞானம் கிடைத்த அதே நேரத்தில் மன அமைதியும் கிடைத்தது.

இந்த முறை தலைமையக பத்திரிகை குழுவும் யூ.கே வின் பத்திரிகை குழுவும் சிறப்பாக செயல்பட்டன. பிரஸ், மீடியா மூலமாக **யூகேவில் மட்டுமே ஏறக்குறைய 13 மில்லியன் நபர்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது.** கட்டுரைகள் எழுதுபவர்கள் பற்றிய செய்தி இன்னும் கிடைக்கவில்லை. மேலும் ஒரு கணிப்பின்படி, **வெளி நாட்டில் இதன் மூலமாக 12,13 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி கிடைத்திருக்கும்; இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்திருக்கும்.**

அவ்வாறே ஓர் அஹ்மதியுடன் ஒரு பெண் பத்திரிகையாளரும் வந்திருந்தார். அவருடன் வந்திருந்த அஹ்மதியிடம் இன்னோர் அஹ்மதி பர்தாவைக் கொடுத்து, நமது சூழ்நிலையில் தலையை மூடுவது அவசியமானதாகும். எனவே அவரிடம் இதைக் கொடுத்து தலையை மூடச் சொல்லவும் எனக் கூறியிருக்கிறார். **அப்படிப்பட்ட ஆண்களிடம் நான் கூறுகிறேன்: நீங்கள் முதலில் உங்கள் வீடுகளை சரி செய்யுங்கள்.** உலகம் தானாகவே சீர்திருந்திவிடும் - இன்ஷா அல்லாஹ். இப்படிப்பட்ட செயல்தான் இஸ்லாத்தை விட்டும் மக்களை வெறுப்படையச் செய்து விடுகிறது.

இந்த முறை **M.T.A** துறையும் நம்மவர்களிடமும், மற்றவர்களிடமும் நிகழ்ச்சியை ஒளிபரப்புவதில் முக்கிய பங்கு வகித்திருக்கிறது. மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து அஹ்மதிகள் மகிழ்ச்சியடைந்த அதே நேரத்தில் மற்றவர்களும் நல்ல தாக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். **அஹ்மதியல்லாத அரபிகளும் மிக நல்ல தாக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.** அஹ்மதிய்யா ஜமாஅத் பரப்புகின்ற இதுதான் உண்மையான இஸ்லாமாகும். இன்று இதுதான் உலகத்திற்குத் தேவையாகும் என்று கூறினர். மேலும் இன்று முஸ்லிம்களுக்கு தேவையான உண்மையான கிலாஃபத் அமைப்பு இதுதான் என்றும் கூறினர்.

பத்திரிகையாளர்களின் மூலமாக மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றி மக்களுக்கு தூது சென்றடந்தது மட்டுமல்லாமல்,கடைசி நாளில் இன்டர்நெட் மூலமாக பார்க்கப்படும் **M.T. A Live Streaming** மூலமாகவும் இவ்வாண்டு 3,30,000 மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கின்றனர். மற்ற நாட்களிலும் சென்ற ஆண்டை விட பல்லாயிரம் மடங்கு அதிகமானவர்கள் **M.T. A Live Streaming** மூலமாக பார்த்திருக்கின்றனர். **M.T. A** வில் நேரடியாக பார்ப்பவர்களின் எண்ணிக்கை தனியாகும்.

ஆக, இந்த தாக்கங்களையும் மீடியா, கவரேஜ் பற்றியும் கேட்டீர்கள். ஆனால் இவை நமது கால்களை மேலும் முன்னேற்றப் பாதையில் எடுத்து வைப்பதற்கு மேலும் அதிகமான உணர்வை ஊட்டக் கூடியதாக இருக்க வேண்டும். நாம் அதிகமாக பெற்று விட்டோம் என மகிச்சியடைந்து உட்கார்ந்து விடக் கூடாது. முன்னேற்றமடையும் சமுதாயங்கள் மேன்மேலும் முன்னேற்றத்திற்கான வழிகளை தேடுவதில் ஈடுபடுகின்றன. நமது சில பலவீனங்களும் இருக்கின்றன. அதிகமான அளவில் ஏற்பாடுகள் செய்யும்போது பலவீனங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அது ஒன்றும் பரவாயில்லை. ஆனால் அதற்கான தீர்வை தேடுங்கள். பலவீனங்கள் பணியாளர்களின் மூலமாக மட்டும் ஏற்படுவதில்லை. கலந்து கொள்பவர்கள் நடந்து கொள்ளும் முறையினாலும் ஏற்பட்டு விடுகின்றன. உதாரணமாக பெண்களுக்கான திடலில் ஒரு பெண் தனது குழந்தையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அப்போது பெண் பணியாளர் அவரிடம், இது குழந்தைகள் அமரும்

இடமல்ல என்றார். அப்போது அவர் சரி. எனக்குத் தெரியாது; நான் சென்று விடுகிறேன் என்றார். பின்னர் அந்தப் பெண் அஹ்மதியல்ல எனவும் அஹ்மதியல்லாத பெண் எனவும் அந்தப் பெண் பணியாளருக்குத் தெரிய வந்தது. அப்போது அவர் அந்த அஹ்மதியல்லாத பெண்ணிடம் மன்னிப்பு கேட்டவாறு உங்கள் குழந்தை அமைதியாக இருக்குமென்றால் நீங்கள் இங்கேயே உட்கார்ந்து கொள்ளலாம் என்றார். ஆனால் அவருடன் அமர்ந்திருந்த அஹ்மதி பெண், பெண் பணியாளருடன் சண்டையிட ஆரம்பித்து விட்டார். நல்ல வேளை பெண் பணியாளர் புரிந்து விட்டார். அவர் அங்கிருந்து மவுனமாக நகர்ந்து சென்று விட்டார். **ஆனால் அந்த அஹ்மதி பெண், இங்கு உட்காரக் கூடாது என்பது ஹதீஸா? எனக் கேட்டார். இப்படிப்பட்ட பிடிவாதம் பிடித்த பெண்கள் தமது நடைமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.** மாநாட்டில் இவ்வளவு நல்ல தாக்கங்கள் ஏற்படும்போது இப்படிப்பட்ட நடத்தைகள் தீய விளைவை எற்படுத்தி விடும். நல்ல வேளை அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பார்க்கவில்லை.

மற்றபடி, ஹதீஸா என்பதைப் பொருத்தவரை, கட்டுப்படுங்கள் என்பது தானே ஹதீஸ்! தம்மை அஹ்மதி என்று கூறுபவர் இந்த ஹதீஸின்படி செயல்பட வேண்டும். ஆனால் ஆண் பணியாளர்களுக்கும், பெண் பணியாளர்களுக்கும் வழிகாட்டல் என்னவென்றால் , **அப்படி யாராவது இனி நடந்து கொண்டால் நீங்கள் உங்கள் மேலதிகாரியிடம் தெரிவியுங்கள். அப்படி நடந்து கொள்பவர்களின் முக்கியமான கார்டை கேன்சல் செய்து விடுங்கள். அவருக்கு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அனுமதி இருக்காது.** நமக்கு அப்படிப்பட்ட வரம்பு மீறி நடக்கும் தன்மை கொண்டவர்கள் தேவையில்லை.

எப்படி இருப்பினும், அல்லாஹ்வின் அருளினால் ஒட்டுமொத்தமாக பாக்கும்போது மாநாடு நல்ல முறையில் கழிந்தது. விருந்தினர்கள் நல்ல தாக்கங்களைப் பெற்றனர். அல்லாஹ் இந்த நல்ல விளைவுகளை எப்போதும் நிலைபெறச் செய்வானாக். நமது வாழ்வின் அங்கமாக ஆக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. பணியாளர்களுக்கு, விருந்தினர்கள் நன்றி செலுத்தியது போன்று நானும் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக. அவர்களுடைய தொண்டுகளை ஒப்புக்கொள்வானாக.

**Summarized & Published By Nazarat Nashr-O-Isha'ath Qadian**

**Translated By: *O.M.Muzzammil Ahmad* For TAMIL Desk**